Please check the examination details below before entering your candidate information

| Candidate surname | Other names |
|---|---|
| | |

Centre Number | Candidate Number

# Pearson Edexcel International GCSE (9–1)

## Thursday 12 June 2025

Morning (Time: 2 hours 30 minutes)

**Paper reference** **4TA1/01**

# Tamil

## PAPER 1: Reading, Writing and Translation

**You do not need any other materials.**

Total Marks

## Instructions

- Use **black** ink or ball-point pen.
- **Fill in the boxes** at the top of this page with your name, centre number and candidate number.
- There are **three** sections you must answer:
  – Section A Questions 1–4
  – Section B Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c)
  – Section C Question 7.
- Answer the questions in the spaces provided
  *– there may be more space than you need.*
- You must **not** use a dictionary.

## Information

- The total mark for this paper is 100.
- The marks for **each** question are shown in brackets
  *– use this as a guide as to how much time to spend on each question.*

## Advice

- Read each question carefully before you start to answer it.
- Check your answers if you have time at the end.

*Turn over* ▶


©2025 Pearson Education Ltd.
Y:1/1/1/1/1

P 7 9 7 4 3 A 0 1 2 4

Pearson

**SECTION A: READING**

**Answer ALL questions.**

**Write your answers in the spaces provided.**

**Multiple-choice questions must be answered with a cross in a box ☒. If you change your mind about an answer, put a line through the box ☒ and then mark your new answer with a cross ☒. Open-response questions do not have to be written in full sentences and you may respond using single words or phrases.**

**1** தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி தமிழில் கேள்விகளுக்குரிய சரியான எழுத்தைப் பெட்டியில் எழுதுக.

**ஆசிரியர்கள்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது தமிழ் சான்றோரின் வாக்கு. கடவுளை விட உயர்வான முன்மாதிரியாக ஆசிரியர்கள் மதிக்கப்படுகிறார்கள். ஒழுக்கம், ஊக்கம், விடாமுயற்சி என்ற அனைத்தையும் மாணவர்களிடமிருந்து ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

கற்க வேண்டியது உலகில் ஆயிரம் இருந்தாலும் எவை கற்க உகந்தது என்பதை அன்னப் பறவை, பாலிலிருந்து நீரைப் பிரிப்பது போன்று அறிவைப் பிரித்து எடுப்பதை சிறந்த முறையில் கற்பித்து, நற்பழக்க வழக்கங்களை உணர்த்துவதே சிறந்த ஆசிரியரின் பண்பாகும். அவ்விதத்தில் பார்க்கையில் நாம் அனைத்து உயிர்களிடத்திலிருந்தும் பாடம் கற்றுக்கொள்கிறோம்.

இருப்பினும் அதனை எவ்வித சலிப்பும் ஏற்படாவண்ணம் பல உத்திகளைக் கையாண்டு கவனம் சிதறாமல் கற்பிப்பதே சிறந்த ஆசிரியருக்கான அடையாளமாகிறது.

“சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்” எனும் பழமொழிக்கிணங்க மனிதன் அறிவுடன் பிறந்து இருந்தாலும் அவ்வறிவைப் பகுத்தறிந்து பயன்படுத்த ஆசிரியர் எனும் ஒரு வழிகாட்டி, அவசியம் தேவைப்படுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA



P 7 9 7 4 3 A 0 2 2 4

| | | |
|---|---|---|
| **A** வழிகாட்டி | **B** சான்றோர்கள் | **C** உயிரினங்களும் |
| **D** புத்தகங்கள் | **E** வகுப்பறை | **F** ஒழுக்கத்தை |
| **G** சலுகைகள் | **H** பாலிலிருந்து | **I** பெற்றோர்கள் |
| **J** எதிர்காலத்தை | **K** குளம் | **L** கெட்டது |
| **M** மேலாளர்கள் | | |

| | |
|---|---|
| **உதாரணம்** | தமிழர்கள் ஆசிரியர்களை குரு, தெய்வம், பெற்றோர்கள் ........ விட மேன்மையாகக் கருதுகிறார்கள். |
| **1** (a) | ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையைக் கற்பிப்பதில் ஆசிரியர்கள் ஒரு சிறந்த உண்மையான ......................... |
| **1** (b) | ஆசிரியர்களை குரு என்று ......................... குறிப்பிடுகிறார்கள். |
| **1** (c) | ஆசிரியர்கள் ......................... யும் உந்துதலையும் எதிர்பார்க்கின்றனர். |
| **1** (d) | அன்னப் பறவை ......................... நீரைப் பிரிக்கும். |
| **1** (e) | அனைத்து ......................... சிறந்த பாடத்தை கற்றுத்தரவல்லன. |
| **1** (f) | அனைவர்க்கும் தங்கள் ......................... ஒளிமயமாக்க ஒரு நல்ல ஆசிரியர் தேவை. |

**(Total for Question 1 = 6 marks)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**2** கீழே தரப்பட்டுள்ள உரையாடலை வாசித்து 8 பொருத்தமான பெட்டிகளில் புள்ளடியிடுக. சில பெட்டியில் ஒன்றிற்கும் மேற்பட்ட புள்ளடிகள் இடவோ அல்லது எதையுமே இடாதிருக்க வேண்டியிருக்கலாம்.

**மாணவர்களின் ஆரோக்கியத்தில் விளையாட்டுகளின் முக்கியத்துவம்**

**வான்மதி**



விளையாட்டுகள் மாணவர்களின் சிறந்த உடல் வளத்தை வளர்ப்பதற்கு உதவுகிறது. உடற்பயிற்சி நம் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். சிறு வயதிலிருந்தே எந்தவொரு விளையாட்டையும் பயிற்சி செய்வது என்பது மாணவர்களுக்கு பல வழிகளில் உதவுகிறது. ஏனெனில் மிதமான தினசரி உடற்பயிற்சி அதிக எடையையும் உடற்பருமனையும் தடுக்க உதவுகிறது என நான் கருதுகிறேன்.

**கதிர்**



இது மன அமைதியையும், தெளிவான சிந்தனையையும் வளர்க்க உதவுகிறது. ஏனெனில் இளமைப் பருவத்தில் மாணவர்களாக நாம் பெறும் பழக்கங்கள் அவர்கள் எதிர்காலப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும். இது சமூகத் தொடர்புகளை வளர்க்கவும் உளவியல் ரீதியாகவும் குழுவுடன் கூடிய நடவடிக்கைகளையும் தொடர்பாடல்களையும், சமூக ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துகின்றது.

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA



P 7 9 7 4 3 A 0 4 2 4

ஜெயா



விளையாட்டு மாணவர்கள் தங்கள் சமூகச் சுயமரியாதையை வலுப்படுத்தவும், நிர்ணயிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் வழிவகுக்கிறது. டென்னிஸ் போன்ற தனிப்பட்ட விளையாட்டால் மாணவர்கள் சிறப்பாகக் கவனம் செலுத்தும் திறனை வளர்த்துக் கொள்ள முடியும். விலை உயர்ந்த விளையாட்டு சாதனங்களும் அவசியமாகிறது. அதே சமயம் குழு விளையாட்டுகள் அவர்களின் எதிர்காலத் தொழில் ஆற்றலை வளர்க்கலாம்.

| | | வான்மதி | கதிர் | ஜெயா |
|---|---|---|---|---|
| **உதாரணம்** | **டென்னிஸ் ஒரு நல்ல தனிப்பட்ட விளையாட்டு.** | ☐ | ☐ | ☒ |
| **A** | மாணவர்களின் மன ஆரோக்கியத்திற்கு விளையாட்டு உதவுகிறது. | ☐ | ☐ | ☐ |
| **B** | விளையாட்டு சமூகத் தொடர்புகளை வளர்க்கிறது. | ☐ | ☐ | ☐ |
| **C** | விளையாட்டு நடவடிக்கைகள் விலை உயர்ந்தவை. | ☐ | ☐ | ☐ |
| **D** | விதிகளைப் பின்பற்ற உதவுகிறது. | ☐ | ☐ | ☐ |
| **E** | உடற்பயிற்சி நம் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். | ☐ | ☐ | ☐ |
| **F** | இது எடை நிர்வாகத்திற்கு உதவுகிறது. | ☐ | ☐ | ☐ |
| **G** | இளமைப் பருவத்தில் நாம் பெறும் பழக்கங்கள் எதிர்காலப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்கும். | ☐ | ☐ | ☐ |

**(Total for Question 2 = 8 marks)**

DO NOT WRITE IN THIS AREA

3 தொழிலைப் பற்றிய கட்டுரையைப் படியுங்கள். தமிழில் எண்கள் அல்லது வார்த்தைகளால் பதிலளிக்கவும்.

**தொழில் உலகம்**

நல்ல வேலை கிடைப்பது முக்கியம். பெரும்பாலான மக்கள் வாழ்நாள் முழுவதும் ஒரே தொழிலைச் செய்ய வேண்டும் என்று சிலரும் மாறிவரும் தேவைகள், நடைமுறைப் போக்குகளுக்கும் ஏற்பச் செய்யும் தொழிலை மாற்றிக்கொள்வது அவசியம் என்றும் சிலரும் கருத்தளிக்கின்றனர். செய்யும் தொழிலே தெய்வம்" என்பது தமிழ் வாக்கு.

உதாரணமாக, பல ஆண்டுகளாக ஒரே துறையில் பணிபுரியும் ஒருவர் தன்னுடைய பரந்த அனுபவத்தின் காரணமாக அனைத்து நுணுக்கமான விவரங்களையும் நன்கு அறிந்திருப்பார். அத்துறையில் புதிதாகத் தொழில் செய்ய வரும் புதியவரிடமிருந்து அதே அளவிலான செயல் திறனை எதிர்பார்க்க முடியாது. தொழில் முனைவோர் தமது வணிகங்களை தாமே நடத்துகிறார்கள். அவர்களே நிதிப் பொறுப்புகளையும் எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு போதுமான அனுபவம் இல்லாமலும் இருக்கலாம் மேலும் அவர்களின் வணிகத்திற்கு நிதியளிக்கக் கடன் வாங்கவும் வேண்டியிருக்கும். ஆனால் ஊழியர்கள் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறவர்களாக நிர்ணயிக்கப்பட்ட சம்பளத்தைப் பெறுவதுடன் பிற அனைத்து சலுகைகளையும் பெறுகிறார்கள். இதனால் அதிகம் அனுபவமுள்ள ஒருவரையே நிறுவனங்களும் தக்கவைத்துக்கொள்வதில் ஆர்வம் காட்டும்.

இருப்பினும், ஒரு தொழிலில் அதிக காலம் செலவிடும் பொழுது, காலப்போக்கில் குறைந்த சகிப்புத்தன்மை, படைப்பாற்றல் போன்ற பல சவால்களைச் சந்திக்க வேண்டி வரலாம். செய்யும் தொழிலை மாற்றுவது நல்லது என்றாலும், அடிக்கடி செய்யும் மாற்றம் நன்மை தருவதில்லை.

அவ்வாறு செய்யும் ஒருவர் அவர் தேர்ந்தெடுத்த தொழிலின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய நவீன, புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளுதல், அதன் சம்மந்தப்பட்ட துறைகளில் வேறொரு பொறுப்பை மேற்கொள்ளுதல் போன்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுதல், அத்தொழிலில் தொடர்ந்து பணிசெய்வதற்கு அவசியமாகிறது.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**உதாரணம்:** வாழ்க்கையில் முக்கியமான ஒரு விஷயம்:

ஒரு சிறந்த தொழில்

(a) பெரும்பாலான மக்கள் தங்கள் தொழில் வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள்:

**(1)**

(b) சிலர் வேலையை மாற்ற விரும்புவதற்கு ஒரு காரணம்:

**(1)**

(c) "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற சொற்றொடரை நாம் எப்படிப்பட்ட நபருக்குப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றிய இரண்டு விவரங்கள்.

**(2)**

(d) ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதில் இருக்கும் இரண்டு சவால்கள்:

**(2)**

(e) புதிய தொழில் முனைவோர் ஆரம்பத்தில் நல்ல வேலையைச் செய்யாததற்கு ஒரு காரணம்:

**(1)**

(f) தொழில் முனைவோர் ஊழியர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்பதற்கான இரண்டு விவரங்கள்:

**(2)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

(g) அனுபவம் வாய்ந்த ஊழியர்களிடமிருந்து நிறுவனங்களின் எதிர்பார்ப்பு:

**(1)**

.......................................................................................................................................

(h) நீண்டகால ஊழியர்கள் போராடும் இரண்டு விஷயங்கள்:

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

**(Total for Question 3 = 12 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**

**4** (a) முனைவர் என். மகாலிங்கம் அவர்களைப் பற்றிய பின்வரும் சுருக்கத்தைப் படியுங்கள்.

**முனைவர் என். மகாலிங்கம்**

முனைவர் என். மகாலிங்கம் என்ற பொள்ளாச்சி மகாலிங்கம், அருட்செல்வர் என்றும் பிரபலமாக அறியப்பட்டார்.

அவர் "தென் இந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் பொள்ளாச்சியில் பிறந்தார். அவரது தந்தை, பி. நாச்சிமுத்து அவர்கள், 1921-இல் தனது வணிகத்தைத் தொடங்கினார். விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த அவரது தந்தை, தனது விவசாயப் போக்குவரத்திற்கு எருதுகள், குதிரைகள் பயன்படுத்தி, பின்னர் லாரிகளில் வணிகம் செய்து வந்தார். அவரது தந்தை 1931 இல் பொருள்கள் பரிமாற்று வணிகத்தைப் போக்குவரத்து வணிகமாக விரிவாக்கி, அண்ணாமலை பேருந்து போக்குவரத்து (ABT) நிறுவனத்தை நிறுவினார்.

முனைவர் மகாலிங்கம் ஒரு இயற்பியல் பட்டதாரி ஆவார். மகாலிங்கம், தந்தையின் திடீர் மரணத்திற்குப் பிறகு தனது முப்பத்தோராம் வயதில் குடும்பம், வணிகம் அனைத்திற்கும் பொறுப்பேற்றார்.

"ஒரு சிறிய விதை, மிகப்பெரிய ஆலமரமாக வளர்வதைப் போல" அவர் துணிகள், நிதி, வாகனங்கள் போன்ற 21 வகை தொழில்களில் வணிகத்தை விரிவாக்கிப், பன்னாட்டுத் தொழில் குழுமமான “சக்தி குழுமத்தை” நிறுவி வெற்றியுடன் வழி நடத்தி வந்தார்.

அவர் 2007 ஆம் ஆண்டில் பத்மபூஷன், தேசிய ஒருங்கிணைப்பு விருது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து கௌரவ பட்டங்கள் போன்ற பல்வேறு விருதுகளையும் பெற்றார்.

அவர் ஒரு தொழிலதிபராக இருந்தாலும் மகாத்மா காந்தியின் போதனைகளிலும் ஆன்மீக, சமுதாய சேவைக்கும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தினார். முனைவர் மகாலிங்கம் தனது தொண்ணூற்றொராவது வயதில் காந்தியின் வாழ்க்கைத் தரவுகள் குறித்த ஒரு பேச்சை அளிக்கும் போதே காலமானார்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** (a) கேள்விகளுக்கான விடைகளைத் தமிழ் மொழியில் தரப்பட்ட தகவலிலிருந்து எழுதுக. முழு வசனத்தில் விடைகள் எழுதவேண்டுமென்பது கிடையாது.

(i) 1921 இல் என்ன நடந்தது?

**(1)**

.......................................................................................................................................

(ii) முனைவரின் தந்தை 1931 முதல் என்ன புதிய போக்குவரத்து சேவையை வழங்கினார்?

**(1)**

.......................................................................................................................................

(iii) முனைவரின் முப்பத்தொன்றாம் வயதில் நடந்தது என்ன? இரண்டு விவரங்களைக் கொடுக்கவும் (இரண்டும் தேவை).

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

(iv) முனைவர் மகாலிங்கம் கல்வித் தகுதிகள் என்ன?

**(1)**

.......................................................................................................................................

(v) சக்தி குழுமம் வர்த்தகம் செய்த இரண்டு துறைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

(vi) 2007 ஆம் ஆண்டில், முனைவரை இந்தியா அரசாங்கம் எவ்வாறு கௌரவித்தது.

**(1)**

.......................................................................................................................................

(vii) முனைவர் மகாலிங்கம் வாழ்க்கை தொடர்பாகக் காந்தியை ஏன் குறிப்பிடப்படுகிறார்?' ஏதேனும் இரண்டைக் கூறுக.

**(2)**

.......................................................................................................................................

.......................................................................................................................................

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**4** (b) **கலந்துரையாடல்**: வசந்தி விஜயனிடையே நீர் போக்குவரத்தின் நன்மை தீமைகள் குறித்த கலந்துரையாடலைப் படிக்கவும்.

**வசந்தி**:

நீர்வழிப் போக்குவரத்து என்பது ஒரு வகைப் போக்குவரத்து. இரண்டு இடங்களுக்கு இடையில் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு உதவுகிறது. இது செலவு குறைந்த வழியாகும். அது குறைந்த பராமரிப்புடன் நீண்ட தூரப் பயணங்களைச் செய்வதற்கான மலிவான முறையாகவும் இது அமைகிறது. அதன் ஆயுள், நம்பகத்தன்மை காரணமாக, இந்த வகை போக்குவரத்து மிகவும் சிக்கலான அல்லது கணிக்க முடியாத சூழ்நிலைகளில் கூட மிக எளிதாகச் செயல்பட முடியும். விடுமுறைக் காலங்களில் கப்பல் மூலம் பிரயாணம் செய்வது மக்களிடையே மிகவும் பிரபலமாக உள்ளது. இது அனைத்து தலைமுறையினருக்கும் குடும்பங்களுக்கும் ஒன்றாக விடுமுறையைக் கழிக்க உதவுகிறது. சிலசமயங்களில் இப்பயணங்கள் வாழ்நாளில் கிடைக்கப்பெறும் அறிய வாய்ப்பாகும்.

விமான போக்குவரத்துக்கு மாறாக இதில் எண்ணெய், திரவங்கள், ஆபத்தான பொருள்கள் போன்ற அனைத்து வகையான பொருள்களையும் கொண்டு செல்ல முடியும். விமானத்துடன் ஒப்பிடும் போது அதில் நிறையக் கட்டுப்பாடுகள் இல்லை, அத்தோடு இப்பொருள்களை எடுத்துச் செல்லவும் முடியும். மேலும், நீர்ப் போக்குவரத்து ஒப்பீட்டளவில் குறைந்த கார்பன் தடம் வழங்குவதால் இது சுற்றுச்சூழலுக்கு உகந்தது.

**விஜயன்**:

நீரில் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் போன்ற அபாயங்கள் உள்ளன. மேலும் ஆறுகள் நவீனக் காலங்களில் முன்பு உள்ளதைவிட அதிகமாக மாசுபடுகின்றன. பயணம் செய்ய அல்லது பொருள்களைக் கொண்டு செல்ல நீண்ட நேரம் எடுக்கும், இது விநியோக தாமதங்கள் அல்லது திசைதிருப்பல்களுக்கு வழிவகுக்கிறது. அழுகக்கூடிய பொருள்கள் அவற்றின் இலக்கை அடைய நேரம் எடுக்கும், எனவே இது பொருளாதார இழப்பு, வேலை வாய்ப்புகள் இழப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. அத்தோடு ஒரு நிறுவனம் அதன் எதிர்கால இருப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும், இந்த நீர்வழிகளைப் பயன்படுத்திப் பயணிக்கும் கப்பல்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான துறைமுகங்கள் சரியாக இல்லை. சில நேரங்களில் இது கூடுதல் தேவைகளைக் கொண்டவர்களுக்கு ஏற்றதல்ல. மேலும் கப்பல்களில் பயணிக்கும்போது நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் உணர்ந்தால், நீர்ப் பயணத்தின் போது அனைத்து நிலைமைகளுக்கும் சிகிச்சையளிப்பது கடினமாகும். அத்துடன், செலவும் அதிகமாகலாம்.

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

4 (b) (i) வசந்தியின் கூற்றுப்படி நீர்வழிப் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளைப் பட்டியலிடுக.

**(2)**

....................................................................................................................................

....................................................................................................................................

(ii) விஜயனின் கூற்றுப்படி நீர்வழிப் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளைப் பட்டியலிடுக.

**(2)**

....................................................................................................................................

....................................................................................................................................

**(Total for Question 4 = 14 marks)**

**TOTAL FOR SECTION A = 40 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION B: WRITING

Answer Questions 5 and **either** Question 6(a) **or** 6(b) **or** 6(c).

**Write your answers in the spaces provided.**

**5** உங்கள் விடுமுறையின் நினைவுகள் பற்றி 60 முதல் 75 வார்த்தைகள் வரை தமிழில் எழுதுங்கள். நீங்கள் கீழே தரப்பட்டுள்ள எல்லாச் சொற்களையும் பயன்படுத்த வேண்டும்.

**எனது விடுமுறை**

பல்வேறு வகையான விடுமுறைகள்

விடுமுறைகளின் முக்கியத்துவம்

சென்ற விடுமுறையில் நீங்கள் செய்த செயல்கள்.

அடுத்த விடுமுறைக்கான திட்டங்கள்

**(14)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA



P 7 9 7 4 3 A 0 1 4 2 4

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 5 = 14 marks)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

BLANK PAGE

**6** பின்வரும் மூன்று விருப்பத் தெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, தமிழில் சுமார் **75** வார்த்தைகளில் எழுதவேண்டும்.



**விருப்பத்தேர்வு 1**

(a) உங்கள் பொழுதுபோக்கின் நன்மைகளைப் பற்றி உங்கள் உள்ளூர் செய்தித்தாளுக்கு ஒரு வலைப்பதிவை எழுதுங்கள்.

- உங்கள் பொழுதுபோக்கின் பெயரும் விவரங்களும்.
- உங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கு விளையாட்டை விளையாடியதன் நினைவுகள்.
- உங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கை எதிர்காலத்திற்கு ஏற்ப மேம்படுத்துவதற்கான வழிகள்.

**(26)**

**விருப்பத்தேர்வு 2**

(b) வெளிநாட்டில் வசிக்கும் உங்கள் நண்பருக்கு நீங்கள் வசிக்கும் இடத்தில் ஒரு பிரபலமான தமிழ்க் கலாச்சார விழாவை விளக்கி மின்னஞ்சல் எழுதவும்.

- கலாச்சார நடவடிக்கைகளின் பெயரும் விளக்கமும்.
- கடந்த காலத்தில் நீங்கள் கொண்டாடிய நினைவுகள்.
- வரவிருக்கும் உங்கள் கலாச்சார விழாவை வளப்படுத்துவதற்கான யோசனைகளைப் பரிந்துரைக்கவும்.

**(26)**

**விருப்பத்தேர்வு 3**

(c) உங்கள் எதிர்காலப் படிப்புத் திட்டங்களை விவரிக்கும் கடிதத்தை எழுதுங்கள்.

- தகுதிகள், குணங்கள் பற்றிய விவரங்கள்.
- வேலை வாய்ப்புகளின் எதிர்கால வாய்ப்புகள்.
- உங்கள் தேர்வை பாதித்த அனுபவங்கள் அல்லது நபர்களின் விவரங்கள்.

**(26)**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

குறியீடு ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் நீங்கள் எந்தக் கேள்வியைத் தெரிவு செய்கிறீர்கள் என்பதைக் குறிக்கவும். நீங்கள் உங்கள் மனதை மாற்றினால், குறியீட்டில் குறுக்கு ☒ வரியை இட்டு, பின்பு புதிய குறியீட்டில் ☒ [எக்ஸ்] குறியிடுவதன் மூலம் உங்கள் புதிய கேள்வியைக் குறிக்கவும்.

**Indicate which question you are answering by marking a cross ☒. If you change your mind, put a line through the box ☒ and then indicate your new question with a cross ☒.**

**Question 6(a)** ☒ **Question 6(b)** ☒ **Question 6(c)** ☒

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

**(Total for Question 6 = 26 marks)**

**TOTAL FOR SECTION B = 40 MARKS**





DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

## SECTION C: TRANSLATION INTO TAMIL

**Write your answer in the space provided.**

**7** பின்வரும் கட்டுரையைத் **தமிழில்** மொழிபெயர்க்கவும்.

Money is something we use every day to buy things that we need. It is very important to understand the value of money and how to use it. Handling money wisely means making good choices on what we spend it for. Money helps us get the basic needs on things like food, clothes, and a place to live. One way to be smart with money is by saving it. These savings can later be used to buy things that you like to buy or do things like going on a dream holiday.

**(20)**

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

(Total for Question 7 = 20 marks)

**TOTAL FOR SECTION C = 20 MARKS**
**TOTAL FOR PAPER = 100 MARKS**

DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA
DO NOT WRITE IN THIS AREA

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA

**BLANK PAGE**



P 7 9 7 4 3 A 0 2 3 2 4

BLANK PAGE

**Source information**

**Question 1**

Source: tamilkatturai.com

**Question 2**

Image © 471933613/Getty Images
Image © rvimages/Getty Images
Image © Vsanandhakrishna/Getty Images

Source: http://www.oblumi.com/blog/the-importance-of-sport-for-the-children-s-health/

**Question 3**

Source: https://www.financialsamurai.com/a-day-job-is-so-much-easier-than-entrepreneurship/

**Question 4 (a)**

Source: adapted from Vallalaar Gandhi Panniyil Arutchelvar By OOran Adigalaar © Jyothi offset printers, Tiruchirapalli.

**Question 4 (b)**

Source: Rivers By Jennings, Terry J © London : Belitha Press

**Question 6**

Image © MuchMania/Getty Images

**Question 7**

Source: https://www.investopedia.com/terms/c/commercialbank.asp

DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA DO NOT WRITE IN THIS AREA